**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**

**வத்திராயிருப்பு**

**அசல் வழக்கு எண். 142/2024**

**வா.சா. 1 பாண்டியராஜன்**

**நாள் 12.11.2025**

**1 மற்றும் 2 ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

வழக்கு சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் எனது தாத்தா சங்கரனுக்கு பாத்தியப்பட்ட சொத்தாகும். ஆனால் நான் தாக்கல் செய்துள்ள வழக்குரை மற்றும் நிருபண வாக்குமூலத்தில் வழக்கு சொத்துக்கள் என்னுடைய தாத்தாவுக்கும் பாட்டிக்கும் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்று சொல்லி உள்ளேன் என்றால் சரிதான். நான் நீதிமன்றத்தின் தாக்கம் செய்துள்ளார் நிருபண வாக்குமூலத்தில் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேனா என்றால் படித்து பார்த்து தான் கையெழுத்து செய்தேன். நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ள சங்கதிகள் நான் சொல்லித்தான் தயார் செய்யப்பட்டது என்றால் சரிதான்.

எனது தாத்தா மற்றும் பாட்டிக்கு கூட்டாக பாத்தியப்பட்ட சொத்து என்றால் எனது தாத்தா மற்றும் பாட்டி கூட்டாக சொத்தினை கிரையம் பெற்றார்கள் என்றால் சரிதான். எனது தாத்தா மற்றும் பாட்டி கூட்டாக சொத்தினை கிரயம் பெற்றதால் இருவருக்கும் சரி பாதி பங்கு கிடைக்கக் கூடியது என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கு ஜோதி என்ற மனைவி உண்டு என்றால் சரிதான். எனது தாத்தாவுக்கும் ஜோதி என்பவருக்கும் பிறந்த வாரிசு தான் டேவிட் என்றால் சரிதான். டேவிட் தற்போது வரை உயிருடன் தான் இருந்து வருகிறார் என்றால் சரிதான். எனது தாத்தா

இறக்கும் வரை டேவிட் என்பவர் தான் பார்த்து வந்தார் என்றால் சரியல்ல எனது தகப்பனார் தான் பார்த்து வந்தார். எனது தாத்தா இறக்கும் வரை டேவிட் மற்றும் 1, 2 பிரதிவாதிகள் தான் கவனித்து வந்தார் என்றும் வழக்கிற்காக எனது தகப்பனார் கவனித்து வந்தார் என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

சங்கரன் மற்றும் பெருமா ஆகிய இருவருக்கும் பிறந்த வாரிசுகள் தான் 1 மற்றும் 2 பிரதிவாதிகள் என்றால் சரிதான். எனது தாத்தா ஜோதி என்பவரை திருமணம் செய்து கொண்டதால் பெருமா தாத்தாவை பிரிந்து தனியாக சென்று விட்டார் என்றால் சிறு வயது என்பதால் எனக்கு அது பற்றி தெரியாது. பாட்டி பெருமா இறக்கும் வரை யாருடன் இருந்து வந்தார் என்றால் எனது தகப்பனாருடன் இருந்து வந்தார். என்னுடைய பாட்டி எங்கே வைத்து இறந்தார் என்றால் எங்களுடைய வீட்டில் வைத்து தான் இறந்தார். எனது பாட்டியின் இறப்புக்கு இறப்பு சான்றிதழ் நான் பெற்றேனா என்றால் இல்லை. இறப்பு சான்றிதழை பெற்று பார்த்தால் அவர் எங்கே வைத்து இறந்தார் என்ற விவரம் தெரிய வரும் என்றால் சரிதான். எனது பாட்டி பெருமா இறக்கும் வரை 1 மற்றும் 2 பிரதிவாதிகளின் கவனத்தில் தான் இருந்து வந்தார் என்றால் சரியல்ல.

னது தாத்தா ஜோதி என்பவரை திருமணம் செய்து கொண்டதால் கூட்டாக பாத்தியப்பட்ட சொத்தை தாத்தா அபகரித்துக் கொள்வார் என்ற எண்ணத்தில் எனது பாட்டி பெருமா அவருக்கு பாதிக்கப்பட்ட சொத்துக்களை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு தான செட்டில்மெண்ட் ஆவணம் எழுதி கொடுத்துவிட்டார் என்று சொன்னால் சரியல்ல. 02.02.2005 அன்று எனது பாட்டி பெருமா, 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ஒரு ஆவணம் எழுதிக் கொடுத்துள்ளார் என்றால்

வழக்கு தாக்கல் செய்யும் வரை அது குறித்து எனக்கு எதுவும் தெரியாது. எனது பாட்டி பெருமா, 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு ஆவணம் எழுதிக் கொடுத்த விபரம் எனக்கு தெரியும் என்றும், வழக்கிற்காக தெரியாது என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

எனது தாத்தா வாதிகள் பெயருக்கு எப்போது ஆவணம் எழுதிக் கொடுத்தார் என்றால் கடந்த 16.03.2009 அன்று எழுதிக் கொடுத்தார். 08.12.2008 அன்று எனது தாத்தா கான்சாபுரம் தொடக்க கூட்டுறவு வேளாண்மை வங்கியில் வழக்குரை சொத்தைப் பொறுத்து அவருக்குரிய சரி பாதி பங்கினை மட்டும் காண்பித்து அடமானம் வைத்துள்ளார் என்று சொன்னால் அது பற்றி எனக்கு விவரம் தெரியாது. டிசம்பர் மாதம் 2008 வது வருடத்தில் பாதி பங்கினை மட்டும் அடமானம் வைத்த எனது தாத்தாவுக்கு மார்ச் மாதம் 2009 ஆவது வருடத்தில் முழு சொத்தை பொருத்தும் ஆவணம் எழுத எவ்வித உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது தாத்தாவை ஏமாற்றி எனது தகப்பனார் ஒரு மோசடியான ஆவணத்தை உற்பத்தி செய்தார் என்றால் சரியல்ல.

எனது பெயரில் பட்டா 2023 வது வருடத்தில் தான் மாறுதல் செய்யப்பட்டது என்றால் சரிதான். வழக்கு சொத்தை பொறுத்து 1 மற்றும் 2 பிரதிவாதிகள் பெருமா என்பவர் எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் உரிமை இருப்பதாகவும், அதை வாதிகள் இடைஞ்சல் செய்ததால் அதற்காக ஒரு அறிவிப்பு அனுப்பிய பின்னரே சொத்துக்கான பட்டாவினை எனது பெயரை நான் மாற்றினேன் என்றால் சரியல்ல. ஏற்கனவே 05.08.2024 அன்று 1 மற்றும் 2 பிரதிவாதிகள் அவருடைய வழக்கறிஞர் மூலம் அறிவிப்பு ஒன்றை எனக்கு அனுப்பினார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பில் நாங்கள் ஏற்படுத்திய ஆவணத்தை ரத்து

செய்ய கேட்டும், சங்கரனுக்குரிய வழக்குச் சொத்தில் பிரதிவாதிகளுக்குரிய பங்கினை பாகம் பிரித்து கேட்டும் அனுப்பி இருந்தார்கள் என்றால் சரிதான். அந்த அறிவிப்பிற்கு நான் பதில் அறிவிப்பு எதுவும் அனுப்பவில்லை என்றால் சரிதான்.

வழக்கு சொத்துக்கு வில்லங்க சான்றிதழ் பெற்று பார்க்கும் பொழுது அதில் பெருமா 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு எழுதிக் கொடுத்த ஆவணங்கள் குறித்த குறிப்புகள் எதுவும் இடம்பெறவில்லை என்று வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. எனது பாட்டி எழுதிக் கொடுத்த ஆவணம் சட்டப்படியான ஆவணம் என்பதால் அது குறித்த குறிப்புகள் வில்லங்கச் சான்றிதழில் காணப்பட்டிருக்கும் என்றும் அது குறித்து எனக்கும் தெரிந்திருக்கும் என்றும் சொன்னால் சரியல்ல. 04.02.2008 அன்று எனது தாத்தா மற்றும் பாட்டி கிரையம் பெற்ற சொத்தினை தாத்தாவினுடைய சுய சம்பாத்தியத்தில் கிரையம் வாங்கிய சொத்தாக சொல்லியுள்ளது பொய் என்று சொன்னால் சரியல்ல. 1 மற்றும் 2 பிரதிவாதிகள் ஆவணம் எழுதி வாங்கிய காலத்திலேயே வருவாய்த்துறை ஆவணங்களில் திருத்தம் செய்யாததால் அவர்கள் வழக்கு சொத்தினை அனுபவம் செய்யவில்லை என்று சொல்வது தவறு என்று சொன்னால் சரியல்ல.

2009 வது வருடத்தில் எங்களுக்கு எழுதிக் கொடுத்த ஆவணத்தின் அடிப்படையில் வருவாய்துறை ஆவணங்களில் மாற்றங்கள் செய்யவில்லை என்றும், 2023 வது வருடத்தில்தான் மாற்றங்கள் செய்தோம் என்றும் சொன்னால் சரிதான். எங்களிடம் கிரையம் கொடுத்துவிட்டு அதற்கான கிரைய தொகையை பெற்று எனது தாத்தா 1 மற்றும் 2 பிரதிவாதிகளுக்கு கொடுத்ததாக வழக்கறிஞர் சொல்லியுள்ள

சங்கரிகளை நிரூபிக்கும் வகையில் எனது தாத்தா ஆவணங்கள் எதுவும் எழுதிக் கொண்டாரா என்றால் எனது தாத்தா ஆவணங்கள் எதுவும் எழுத வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். நான் சொல்வது போல எனது தாத்தா பிரதிவாதிகளுக்கு தொகை கொடுத்திருந்தால் அது குறித்து ஆவணங்கள் எழுதியிருப்பார் என்றும், அவ்வாறு கொடுக்காததால் தான் ஆவணங்கள் எதுவும் எழுதவில்லை என்றும் சொன்னால் சரியில்லை.

பத்திரப்பதிவின் போது தாக்கல் செய்யப்பட்ட பட்டாவிலும் சொத்துக்கான உரிமையாளர் சங்கரன் மற்றும் பெருமா கூட்டு உரிமையாளர் என்று காட்டப்பட்டுள்ளது என்று சொன்னால் சரிதான். பாட்டி பெருமா எப்போது காலம் சென்றார் என்றால் 04.07.2008. எனது பாட்டி காலம் சென்ற பின்பு பிரதிவாதிகளுக்கு பாத்தியப்பட்ட சொத்தை அபகரிக்க வேண்டும் என்று எனது தகப்பனார் மற்றும் எனது தாத்தா சேர்ந்து கொண்டு மோசடியாக ஒரு ஆவணத்தை உற்பத்தி செய்தார் என்றால் சரியல்ல. வருவாய்த்துறையில் இருந்து வழங்கப்பட்ட தீர்வை ரசீதுகள் எதுவும் நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நானும், எனது தகப்பனாரும் அல்லது எனது தாத்தாவும் வழக்கு சொத்தை அனுபவம் செய்திருந்தால் அதற்கான வருவாய்துறை ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருப்பேன் என்றும் அவர் அனுபவம் செய்யாததால் தான் அவ்வாறு எதையும் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல.

1 மற்றும் 2 பிரதிவாதிகளின் அனுமதியின் பெயரில் எனது தகப்பனார் வழக்கு சொத்தை அனுபவம் செய்து வந்தார் என்றும், அதற்காகத்தான் எனது தாத்தா தொகை கொடுத்தார் என்றும் சொன்னால் சரியல்ல. வழக்குச் சொத்தில் பெருமாவுக்குரிய பாதி பங்கினை பொறுத்து 1 மற்றம் 2

பிரதிவாதிகளுக்கு ஆவணம் எழுதி கொடுத்ததால், அந்த பாதி பங்கினை பொறுத்து உரிமை கேட்க எங்களுக்கு எவ்வித உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்கு சொத்தைப் பொறுத்து சங்கரனுக்கு தனிப்பட்ட முறையில் எவ்வித ஆவணங்களும் ஏற்படுத்திக் கொடுத்த உரிமை இல்லை என்று சொன்னால் சரியல்ல. வழக்குரையில் நான் கேட்டுள்ள பரிகாரம் எதுவும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்று சொன்னால் சரியல்ல. நான் வழக்கில் தாக்கல் செய்துள்ள ஆவணங்கள் அனைத்தும் வழக்கிற்காக மோசடியாக உற்பத்தி செய்யப்பட்ட ஆவணங்கள் என்றால் சரியல்ல.

3ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல நான் சொல்ல தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டப்பட்டு அவரால் ஒத்துக்கொண்டு கையெழுத்திட்டுள்ளார்.

ஒப்பம்.ராமநாதன்.
மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்
வத்திராயிருப்பு